**செய்தி வெளியீடு எண்: 628** **நாள்:29.08.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (29.8.2020) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்க உரை.

---

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே !**

**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே !**

**மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களே !**

**மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களே !**

**மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம் அவர்களே!**

**மதிப்பிற்குரிய கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா அவர்களே !**

**மதிப்பிற்குரிய காவல்துறை இயக்குர் திரு.திரிபாதி அவர்களே !**

**அரசு உயர் அலுவலர்களே !**

**மாவட்ட ஆட்சித் தலைவர்களே !**

**மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களே !**

**உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.**

கோவிட் வைரஸ் நோய் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகின்றது.

- எனது தலைமையில் 14 முறை மாநில பேரிடர் மேலாண்மை குழுக்கூட்டங்கள் நடத்தப்பபட்டுள்ளன. இதுவரை, எனது தலைமையில் 9 அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின்

ஆய்வுக் கூட்டங்கள் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றுள்ளன. **(26.3.2020, 6.4.2020, 16.4.2020, 29.4.2020, 13.5.2020, 29.5.2020, 24.6.2020, 29.7.2020, 29.8.2020).**

- தலைமைச் செயலர் அவர்கள், **11** முறை காணொலிக் காட்சி மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தியுள்ளார்.
  - தமிழ்நாட்டில் நோய்த் தொற்றின் நிலைமையை தொடர்ந்து கண்காணித்து, தேவையான தளர்வுகளுடன் தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி பொது முடக்கத்தை மிகவும் கவனமாகவும், பாதுகாப்பாகவும் அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.
  - இதுவரை **கோவிட் நோய் தொற்று கட்டுப்பாடு, சிகிச்சை மற்றும் நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு சுமார் 7,162 கோடி ரூபாய்க்கு மேல் வழங்கியுள்ளது.**
  - **அனைத்து மாவட்டங்களிலும் காய்ச்சல் முகாம்கள் நடத்தியும், வீடு வீடாகச் சென்றும், காய்ச்சல்** மற்றும் வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்களை கண்டறிந்தும், RTPCR சோதனை, தனிமைப்படுத்துதல், சிகிச்சை அளித்தல் போன்றவற்றை சிறப்பாக மேற்கொண்டும் வருகிறோம்.
  - தற்போது மாநில அளவில் கோவிட் மருத்துவமனைகளில் **58,840 படுக்கைகளும்,** கோவிட் சிறப்பு மையங்களில் **77,223** படுக்கைகளும் மற்றும் ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய **26,801** படுக்கைகளும் தயார் நிலையில் உள்ளன.

